بسم الله الرحمن الرحیم نحمدہ ونصلّی علیٰ رسولہ الکریم وعلیٰ عبدہ المسیح الموعود
وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

தொகுதி 1

வருடாந்திர சந்தா ரூபாய் 300/-

வாராந்திர பத்திரிகை

# பதர் காதியான்

The Weekly BADAR Qadian TAMIL

இதழ் 39

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் ரஃபீக் அஹ்மது

30 ஸஃபர் 1438 ஹிஜ்ரி கமரி 1 ஃபதஹ் 1395 ஹிஜ்ரி ஷம்ஸி 1 டிசம்பர் 2016

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்து –லில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவல –னாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**இறைவனால் நியமிக்கப்பட்டவருவருடன் இம்மக்கள், தாம் விரும்பியதைப் போன்று நடந்து கொண்டனர்; தாம் விரும்பியதை எழுதினர். இது வானத்தின் கீழ் நடந்த மிகப் பெரும் அநீதியாகும்.**

**ஹஸ்ரத் யூசுஃப் (அலை) அவர்களின் காலத்தில் ஃபிர்அவ்னுக்குக் கூட உண்மையான கனவுகள் வந்திருந்தன. பெரும் பெரும் காஃபிர்களுக்கு கூட சில நேரங்களில் உண்மையான கனவுகள் வருகின்றன. இறைவனால் ஏற்றுக் கொள்ளப்பட்டவர்கள் ஒன்றிரண்டு கனவுகளால் மட்டுமல்லாமல் அவர்களுக்கு மறைவான செய்திகள் அதிகமாக வழங்கப்படுவதன் மூலமாகவும் ஒரு சிறப்பான அருளின் மூலமாகவும் அடையாளங்கண்டு கொள்ளப்படுகின்றனர்.**

## வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

பகிரங்கமாக வெளிப்பட்ட இறைவனின் அடையாளங்களிலிருந்து அவர்கள் எந்தப் பலனையும் அடைவதில்லை என்பது வேதனைக்குரியதாகும். அவர்களால் புரிந்து கொள்ள முடியாத சில அடையாளங்களை அவர்கள் ஆட்சேபனை செய்வதற்கான ஒரு வழியாக ஆக்கிக் கொண்டனர். எனவே, இதற்கான தீர்ப்பு கூறப்படுவதில் தாமதம் ஏற்படாது என்பதை நான் அறிவேன். இறைவனால் நியமிக்கப்பட்டவருவருடன் இம்மக்கள், தாம் விரும்பியதைப் போன்று நடந்து கொண்டனர்; தாம் விரும்பியதை எழுதினர். இது வானத்தின் கீழ் நடந்த மிகப் பெரும் அநீதியாகும். மிகவும் வியக்கத்தக்க விஷயம் என்னவெனில், அப்துல் ஹகீம் கான் தனது நூலான திக்ருல் ஹகீமின் 45 -வது பக்கத்தில் என்னைப் பற்றி இவ்வாறு எழுதுகின்றார்: எனக்கு உங்கள் தரப்பிலிருந்து எந்த தடுமாற்றமும் ஏற்படவில்லை. நீங்கள் மஸீஹிற்கு ஒப்பானவர் என்பதே எனது ஈமானாகும். நீங்கள் மஸீஹாகவும் நபிமார்களுக்கு ஒப்பானவராகவும் இருக்கின்றீர்கள் என்பதே எனது ஈமானாகும். பிறகு இதே நூலின் 12 -வது பக்கத்தின் 15 -வது வரியிலிருந்து 20 -வரிகள் வரை என்னை உண்மைப்படுத்தும் விதத்தில் அவரது இந்த சொற்றொடர்கள் இருக்கின்றன. அது பேனாவால் பெரிய எழுத்துக்களில் எழுதப்பட்டிருக்கின்றது. எனது சின்னம்மா மகன் மல்லவி முஹம்மது ஹஸன் பேக் என்பவர் இருந்தார். அவர் ஹுஸூர் அவர்களின் கடுமையான எதிரியாக இருந்தார். அவரைப் பற்றி கனவில் எனக்கு அவர் காலத்தின் மஸீஹை எதிர்ப்பதில் பிடிவாதமாக இருந்தால் பிளேக் நோயின் மூலம் அழிந்து போய் விடுவார் என்று தெரிய வந்தது. அவர் நகரத்திற்கு வெளியே நல்ல காற்று வீசுகின்ற விசாலமான ஒரு வீட்டில் இருந்து வந்தார். இந்த கனவை நான் அவரது உடன்பிறந்த சகோதரிடமும் அவரது சிறிய தகப்பானாரிடமும் அவரது ஏனைய அன்பர்களிடமும் கூறியிருந்தேன். ஒரு வருடத்திற்குப் பிறகு அவர் பிளேக் நோயினாலேயே மரணித்தார். (பார்க்க: அப்துல் ஹகீம் கான் எழுதியுள்ள திக்ருல் ஹகீம் என்ற நூல் பக்கம் 12) இப்போது பாருங்கள். ஒருபுறம் இந்த நபர், நான் வாக்களிக்கப்பட்ட மஸீஹாக இருக்கின்றேன் என்பதை ஏற்றுக் கொள்கின்றார். ஏற்றுக் கொண்டது மட்டுமல்லாமல் என்னை உண்மைப்படுத்தும் விதத்தில் ஒரு கனவையும் எடுத்துக் கூறியுள்ளார். அது உண்மையாகி விட்டது.

பிறகு இந்த நூலின் இறுதியிலும் தனது நூலான மஸீஹுத் தஜ்ஜாலிலும் எனக்கு தஜ்ஜால் என்றும், ஷய்த்தான் என்றும் பெயர் வைத்துள்ளார். என்னை நம்பிக்கை துரோகி என்றும், ஹராமானவற்றை உண்பவன் என்றும் பொய்யன் என்றும் அவர் கூறியுள்ளார். இது ஒரு வியப்பான விஷயமாகும். அதாவது, அப்துல் ஹகீம் கானின் இந்த இரு வகையான முரண்பட்ட வாக்குமூலங் -களுக்கு இடையில் சில நாட்களின் இடைவெளி கூட இருக்கவில்லை. ஒருபுறம் அவர் என்னை வாக்களிக்கப்பட்ட மஸீஹ் என்று கூறினார். தனது கனவின் மூலமாக அவர் என்னை உண்மைப்படுத்தினார். ஆனால், அத்துடன் என்னை தஜ்ஜால் என்றும் பொய்யன் என்றும் கூறுகின்றார். அவ்வாறு அவர் ஏன் செய்தார் என்பதைப் பற்றிய கவலை எனக்கு இல்லை. ஆனால், இந்த நபரது நிலை தமது சுயநினைவை இழந்த ஒருவரின் நிலையாகும் என்பதைப் பற்றி ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டும். அதாவது, ஒரு தெளிவான முரண்பாடு இவரது சொற்களில் இருக்கின்றது. ஒருபுறம் அவர் என்னை உண்மையான மஸீஹ் என்று கருதுகின்றார். இன்னும் சொல்வதென்றால், என்னை உண்மைப்படுத்தும் முகமாக ஓர் உண்மையான கனவை அவர் எடுத்துக் கூறியுள்ளார். அது நிறைவேறி விட்டது. மறுபுறம் எல்லா காஃபிர்களை விடவும் மோசமானவராக அவர் என்னை கருதுகின்றார். இதை விட பெரிய முரண்பாடு வேறு ஏதாவது இருக்க முடியுமா? எந்தக் குற்றங்களை அவர் என்னுடன் தொடர்புபடுத்திக் கூறுகின்றாரோ அதைப் பற்றி சுயமே அவர் சிந்திக்க வேண்டும். அதாவது, கனவின் அடிப்படையில் எனது உண்மை அவருக்கு மெய்ப்பிக்கப்பட்டிருக்கின்றது. மாறாக, என்னை உண்மைப்படுத்துவதற்காக இறைவன் ஹஸன் பேக்கை பிளேக்கின் மூலமாக அழித்தும் விட்டான்.[1] ஒரு தஜ்ஜாலுக்காக ,இறைவன் அவனை கொன்று விட்டானா என்ன? இருபது வருடங்களுக்குப் பிறகு தெரிய வந்த அந்தக் குற்றங்கள் பற்றி முதலில் அந்த இறைவனுக்கு தெரியாமல் போனதா?[2] எனக்கு ஷய்த்தானிய கனவுகள் வந்திருக்கலாம். இதுவும் கூட ஒரு ஷய்த்தானிய கனவேயாகும் என்று அவர் கூறும் காரணம் ஏற்றுக் கொள்வதற்குத் தகுதியுடையதல்ல. அவரது இயல்பிலுள்ள தொடர்பின் காரணமாக ஷய்த்தானிய கனவுகள் அவருக்கு வந்திருக்கலாம். மேலும் ஷய்த்தானிய இல்ஹாம் கூட வந்திருக்கலாம் என்பதை நாம் ஏற்றுக் கொள்ள முடியும்.[3] ஆனால், இப்போது அவர் பார்த்துள்ள இந்தக் கனவு ஷய்த்தானிய கனவாகும் என்பதை நம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது. ஏனென்றால், ஷய்த்தானுக்கு ஒருவரை அழிப்பதற்கான ஆற்றல் வழங்கப்படவில்லை. எனினும், இப்போது என்னை எதிர்க்கின்ற நிலையில் அவருக்கு வருபவைதான் ஷய்த்தானிய கனவுகளும் ஷய்த்தானிய இல்ஹாம் -களுமாகும். ஏனென்றால், அவற்றுடன் இறைவனது ஆற்றலின் எந்தவொரு முன்மாதிரியும் இல்லை. எனவே, ஷய்த்தான் அவரை விட்டு விலகி தொலைவில் சென்று விட வேண்டும் என்பதற்காக அவர் முயற்சி செய்ய வேண்டும்.

1 இப்போது அப்துல் ஹகீமிற்கு முஹம்மது ஹஸன் பேக்கின் கபருக்குச் சென்று சகோதரனே! பொய்ப்படுத்தியதில் நீ உண்மையாளனாக இருந்தாய். நான் பொய்யனாக இருந்தேன். எனது பாவத்தை மன்னிப்பாயாக! ஒரு பொய்யனுக்காகவும் தஜ்ஜாலுக்காகவும் ஏன் இறைவன் உன்னை அழித்தான் என்று இறைவனிடம் நீ கேட்டு தெரிந்து எனக்கு அது பற்றி தெரிவிப்பாயாக என்று அழுவது கட்டாயமானதாகும்.

(தொடர்ச்சி 7 -வது பக்கம்...)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprieter Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

குழந்தைகளை வக்ஃபிற்காக முன்னிறுத்தி விடுவதில் தாய், தந்தையரின் கடமை முடிந்து விடுவதில்லை. மாறாக, முன்னரை விட அது அதிகமாகின்றது. நிச்சயமாக ஓர் அஹ்மதி பிள்ளையின் தர்ப்பிய்யத்திற்கான பொறுப்பு பெற்றோர்களுக்கு இருக்கின்றது. ஜமாஅத்தின் ஒவ்வொரு பிள்ளையும் குறிப்பாக வக்ஃபே நவ் பிள்ளைகள் ஜமாஅத்தின் அமானிதமாக அவர்களிடம் உள்ளனர் என்பதை பெற்றோர்கள் நினைவில் கொள்ள வேண்டும். அந்த பிள்ளைகளின் தர்பிய்யத்தும் ஜமாஅத் மற்றும் சமூகத்தின் சிறந்த அங்கத்தினர்களாக அந்தப் பிள்ளைகளை ஆக்குவது போன்றவையும் பெற்றோர்களின் கடமையாகும்.

நாம் வக்ஃப் செய்து விட்டால் எவ்வாறு நாம் உலகியல் ரீதியாக நமது வாழ்க்கையை கழிப்போம்? என்ற சிந்தனை எந்த வக்ஃபே நவ் பிள்ளைகளுக்கும் இருக்கக் கூடாது அல்லது நாம் எப்படி நமது தாய், தந்தையருக்கு பொருளாதாரத்தில் உதவ முடியும்? என்றோ அல்லது வேறு வகையில் எப்படி பெற்றோருக்கு தொண்டாற்ற முடியும்? என்றோ அவர்களுக்கு சந்தேகங்கள் எழக் கூடாது. குறிப்பாக தனது கல்வியை முழுமை செய்த வக்ஃபே நவ் பிள்ளைகள் தங்களின் வெளிப்படையான மற்றும் பொருளாதார நிலைகளை மேம்படுத்திக் கொள்வதற்கு முயற்சி செய்வதற்குப் பகரமாக தமது ஆன்மீக நிலைகளை மேம்படுத்திக் கொள்ள முயற்சி செய்ய வேண்டும். வாக்கிஃபீனே நவ் பிள்ளைகள் தமது போதுமென்ற மனதின் தரத்தை மிகவும் அதிகரித்துக் கொள்ள வேண்டும். தமது தியாகத்தின் தரத்தை மிகவும் அதிகரிக்க வேண்டும்.

வக்ஃபே நவ் பிள்ளைகள் எங்கு தமது தியாகத்தின் தரத்தை உயர்த்த வேண்டுமோ அங்கு தமது இறை வணக்கத்தின் தரத்தையும் அதிகரிக்க வேண்டும். தமது நன்றியுணர்வின் தரத்தையும் அதிகரிக்க வேண்டும். தமது பெற்றோர்களின் உடன்படிக்கையை நிறைவேற்ற தமது அனைத்து ஆற்றல்களையும், திறமைகளையும் பயன்படுத்த முயற்சி செய்ய வேண்டும். மார்க்கத்திற்காக அதனை பயன்படுத்த முயற்சி செய்ய வேண்டும். மார்க்கத்தின் வெற்றிக்காக பணி செய்ய முயற்சி செய்ய வேண்டும். அந்நிலையில் அல்லாஹ்வும் அருள் செய்கின்றான். கூலியின்றி வெறும் கையுடன் எவரையும் இறைவன் அனுப்புவதில்லை.

தனது உலகக் கல்விக்கு இடையில் பல்வேறு காலக்கட்டத்தில் நான் எந்தத் துறையில் செல்ல வேண்டும் என பிள்ளைகள் ஜமாஅத் அமைப்பிடம் கேட்க வேண்டுமே தவிர சுயமாக முடிவெடுக்கக் கூடாது. வக்ஃபே நவ் பிள்ளைகள் துறைகளைத் தேர்ந்தெடுப்பது தொடர்பாக நான் முன்னரே கூறியிருக்கிறேன். ஜாமிஆவில் சென்று முபல்லிக் ஆவதற்கு முன்னுரிமை வழங்க வேண்டும்.

எந்த அஹ்மதி தனது எதிர்கால சந்ததிகள் ஜமாஅத் அமைப்புடன் தொடர்பு கொண்டவர்களாக இருக்க வேண்டும் என விரும்புகின்றாரோ அப்படிப்பட்ட ஒவ்வோர் அஹ்மதியும் தனது குடும்பத்தை அஹ்மதி குடும்பமாக மாற்ற வேண்டும். உலகவாதிகளின் குடும்பமாக உங்கள் வீட்டை ஆக்கிக் கொள்ளக் கூடாது. இல்லையென்றால் எதிர்கால சந்ததிகள் உலகில் வீழ்ந்து அஹ்மதிய்யத்திலிருந்து மட்டுமல்ல. இறைவனிடமிருந்தும் விலகிச் சென்று விடுவர். மேலும் அதன் மூலம் தனது இம்மை மறுமை இரண்டையும் நாசமாக்கிக் கொள்வர்.

## எல்லா அஹ்மதிகளுக்கும் குறிப்பாக வக்ஃபே நவ் திட்டத்தில் இணைந்துள்ள ஆண் குழந்தைகளுக்கும், பெண் குழந்தைகளுக்கும், அந்தக் குழந்தைகளின் பெற்றோர்களுக்கும் ஹுஸூர் அவர்கள் வழங்கிய மிகவும் முக்கியமான போதனைகள்.

சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **கனடாவின் Toronto -விலுள்ள பைத்துல் இஸ்லாம் பள்ளிவாயிலில்** **28 அக்டோபர் 2016** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1395 -ஆம் ஆண்டு **இஹா** மாதம் **28 -ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ - بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ. الرَّحْمٰنِ الرَّحِيْمِ. مٰلِكِ يَوْمِ الدِّيْنِ. إِيَّاكَ نَعْبُدُ
وَإِيَّاكَ نَسْتَعِيْنُ. اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ. صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ.

அல்லாஹ்வின் அருளால் ஜமாஅத்தில் குழந்தைகளை வக்ஃப் செய்வதற்கான எண்ணம் அதிகரித்து வருகின்றது. தினமும் பெற்றோர்களின் கடிதம் எனக்கு வருகின்றது. சில நாட்களில் அந்தக் கடிதங்களின் எண்ணிக்கை 20, 25 ஆக ஆகி விடுகின்றது. அதில் பெற்றோர்கள் தங்களுக்கு பிறக்கவுள்ள குழந்தையை வக்ஃப் செய்வதற்காக விண்ணப்பிக்கின்றனர். ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் இந்த திட்டத்தை தொடங்கியபோது இந்த திட்டம் நிரந்தரமானதாக இருக்கவில்லை. பின்னர்தான் அன்னார் இந்த திட்டத்தை நிரந்தரமாக்கினார்கள். ஜமாஅத்தும் குறிப்பாக தாய்மார்கள் எல்லா நாட்டிலும் 'லெப்பைக்' என்று கூறினர். இன்றிலிருந்து 12, 13 ஆண்டுகளுக்கு முன்னர் இதன் பக்கம் ஜமாஅத்திற்கு கவனம் ஏற்பட்டது. அதன் காரணமாக வாகிஃபீனே நவ்வின் எண்ணிக்கை 28 ஆயிரத்தை விட அதிகமாக இருந்தது. தற்போது இந்த எண்ணிக்கை அல்லாஹ்வின் அருளால் 61 ஆயிரத்தை எட்டி விட்டது. அதில் 36 ஆயிரத்திற்கும் அதிகமானவர்கள் ஆண் பிள்ளைகளும் மீதமுள்ளவர்கள் பெண் பிள்ளைகளும் ஆவர்.

எனவே, நாம் நமது பிள்ளைகளை பிறப்பதற்கு முன்பாக வக்ஃப் செய்ய வேண்டும் என்ற எண்ணம் காலத்திற்கேற்ப அதிகரித்து வருகின்றது. ஆனால், குழந்தைகளை வக்ஃபிற்காக முன்னிறுத்தி விடுவதால் தாய், தந்தையரின் கடமை முடிந்து விடுவதில்லை. மாறாக, முன்னரை விட அது அதிகமாகின்றது. நிச்சயமாக ஓர் அஹ்மதி பிள்ளையின் தர்ப்பிய்யத்திற்கான பொறுப்பு பெற்றோர்களுக்கு இருக்கின்றது. பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு நன்மையை விரும்புகின்றனர். பிள்ளைகள் உலகக் கல்வி, தர்பிய்யத் மற்றும் மார்க்கக் கல்வி போன்றவற்றைப் பெற வேண்டும் என விரும்புகின்றனர். மார்க்கச் சிந்தனை கொண்ட பெற்றோர்கள் என்றால் இதனை விரும்புவர்.

அதாவது, ஜமாஅத்தின் ஒவ்வொரு பிள்ளையும் குறிப்பாக வக்ஃபே நவ் பிள்ளைகள் ஜமாஅத்தின் அமானிதமாக அவர்களிடம் உள்ளனர் என்பதை பெற்றோர்கள் நினைவில் கொள்ள வேண்டும். அந்த பிள்ளைகளின் தர்பிய்யத்தும் ஜமாஅத் மற்றும் சமூகத்தின் சிறந்த அங்கத்தினர்களாக அந்தப் பிள்ளைகளை ஆக்குவது போன்றவையும் பெற்றோர்களின் கடமையாகும். வக்ஃபே நவ் பிள்ளைகளின் தர்பிய்யத் மற்றும் அவர்களின் மார்க்க மற்றும் உலகக் கல்வியின் பக்கம் சிறப்பான கவனம் செலுத்தி அவர்களை சிறப்பான முறையில் தயார்படுத்தி ஜமாஅத்திற்கு கொடுக்க வேண்டும். ஏனென்றால், பிள்ளைகள் பிறப்பதற்கு முன்பு அவர்கள் இந்த உறுதிமொழியை எடுக்கின்றனர். அதாவது, எங்களுக்கு பிறக்கவுள்ள குழந்தையை அது ஆணாக இருந்தாலும், பெண் குழந்தையாக இருந்தாலும் அதனை நாங்கள் இறைவனுக்காகவும், அல்லாஹ்வின் மார்க்கத்திற்காகவும், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உண்மைத் தொண்டரின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காகவும், இஸ்லாத்தின் போதனைகளை உலகில் பரப்புகின்ற நோக்கத்திற்காகவும், இறைவனுக்குரிய கடமைகளை செலுத்துவதற்கு கவனமூட்டக்கூடிய அந்த நோக்கத்திற்காகவும், ஒருவர் மற்றவருடைய உரிமைகளைச் செலுத்துவதற்கு கவனமூட்டக்கூடிய நோக்கத்திற்காகவும் இஸ்லாமிய போதனைகளை உலகின் ஒவ்வொரு நபர் வரை சென்றடையச் செய்யும் நோக்கத்திற்காகவும் எங்கள் பிள்ளைகளை நாங்கள் அர்ப்பணிக்கின்றோம் என பெற்றோர்கள் உறுதிமொழி எடுக்கின்றனர்.

எனவே, இது ஒன்றும் சாதாரண பொறுப்பல்ல. வக்ஃபே நவ் பிள்ளைகளின் பெற்றோர்கள் அதிலும் குறிப்பாக தாய்மார்கள் குழந்தை பிறப்பதற்கு முன்பாகவே

இறைவனுடன் ஓர் உடன்படிக்கை செய்தவாறு அர்ப்பணிக்கின்றனர். மேலும், நாங்கள் ஹஸ்ரத் மர்யத்தின் தாயைப் போன்று அல்லாஹ்விடம் உடன்படிக்கை செய்தவாறு எங்கள் பிள்ளைகளை வக்ஃபே நவ் திட்டத்திற்காக முன்னிலைப்படுத்துகிறோம் என காலத்தின் கலீஃபாவிற்கு எழுதுகின்றனர்.

رَبِّ إِنِّي نَذَرْتُ لَكَ مَا فِي بَطْنِي مُحَرَّرًا فَتَقَبَّلْ مِنِّي إِنَّكَ أَنْتَ السَّمِيعُ الْعَلِيمُ என் இறைவா! என் வயிற்றில் உள்ளதை உனக்காக நான் அர்ப்பணிக்க நேர்ந்துள்ளேன். எனது வயிற்றில் உள்ளது ஆணா? பெண்ணா? என்பது எனக்கு தெரியாது. அது என்ன குழந்தையாக இருந்தாலும் அது மார்க்கத் தொண்டராக ஆக வேண்டும் என்பது எனது விருப்பமும், துஆவும் ஆகும். *ஃபதகப்பல் மின்னீ* – எனது இந்த ஆசை மற்றும் துஆவை நீ ஒப்புக் கொள்வாயாக! إِنَّكَ أَنْتَ السَّمِيعُ الْعَلِيمُ – நிச்சயமாக நீ நன்கு கேட்கக் கூடியவனும், நன்கு அறிந்தவனும் ஆவாய். **(3:36)** எனவே, எனது இந்த பணிவான துஆவையும் கேட்பாயாக! இந்த துஆ எனது உள்ளத்தின் ஓசையாகும் என்பதை நீ நன்கறிவாய்.

இதுதான் குழந்தையை வக்ஃப் செய்வதற்கு முன்னர் ஒரு தாய்க்கு இருக்கும் ஆசையாகும். ஓர் அஹ்மதி தாய்க்கு தனது குழந்தையை வக்ஃபே நவ் திட்டத்திற்காக அர்ப்பணிக்கும்போது இந்த ஆசைதான் அவருக்கு இருக்க வேண்டும். அதில் தந்தையும் அடங்குவார். எனவே, தனது பிள்ளையை வக்ஃபே நவ் திட்டத்தில் சேர்க்கின்ற தாய் இந்த துஆவை செய்கின்றபோது, அந்த உடன்படிக்கையை நிறைவேற்றுவதற்காக மற்றும் அந்த துஅ ஒப்புக் கொள்ளப்படுவதற்காக பெற்றோர்கள் மீதுள்ள கடமைகளின் பக்கமும் அவர்கள் கவனம் செலுத்த வேண்டும். வக்ஃபே நவ் திட்டத்தில் தாய் தந்தை இருவரின் விருப்பத்தின் பேரில்தான் குழந்தை அர்ப்பணிக்கப்படுகிறது. பண்டைய கால ஒரு கதையை எடுத்துக் கூறுவதற்காக அல்லாஹ் திருக்குர்ஆனில் இந்த துஆவை பாதுகாக்கவில்லை. மாறாக, இந்த துஆ அல்லாஹ்விற்கு மிகவும் பிடித்தமானதாக இருந்தது. மேலும், எதிர்காலத்தில் தோன்றும் தாய்மார்களும் இந்த துஆவை செய்து தமது பிள்ளைகளை மார்க்கத்திற்காக அசாதாரணமான தியாகங்களைச் செய்ய வைக்க வேண்டும் என்பதற்காகத்தான் அல்லாஹ் அதனை திருக்குர்ஆனில் பாதுகாத்துள்ளான். ஒவ்வொரு நம்பிக்கையாளரும், உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை அளிப்பதாக உறுதிமொழி எடுக்கின்றார் என்றாலும், வக்ஃப் செய்யக்கூடியவர்கள் இந்த தரத்தின் உச்சகட்டத்தை எட்டியவர்களாக இருக்க வேண்டும்.

எனவே, ஆரம்பத்திலிருந்தே தாய்மார்களும், தந்தையர்களும் தமது பிள்ளைகளின் மூளையில் நீங்கள் வக்ஃப் செய்யப்பட்ட குழந்தைகள் என்ற எண்ணத்தை ஊட்ட வேண்டும். மேலும், நாங்கள் உங்களை முற்றிலும் மார்க்கத்திற்கு தொண்டாற்றுவதற்காக மட்டுமே அர்ப்பணித்துள்ளோம். இதுவே உங்களது வாழ்க்கையின் நோக்கமாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்தை ஊட்டியவாறு துஆவும் செய்யக் கூடியவர்களாக பெற்றோர்கள் இருக்க வேண்டும். அந்நிலையில் நாம் மார்க்கத்திற்கு தொண்டாற்ற வேண்டும் என்ற எண்ணத்துடன் பிள்ளைகள் வளர்ந்து வருவர். நாங்கள் Buissness Man ஆகி வேண்டும் என்ற எண்ணமோ அல்லது நாங்கள் விளையாட்டு வீரராக ஆக வேண்டும் என்பதோ அல்லது நாங்கள் இன்னன்ன துறைகளில் செல்ல வேண்டும் என்ற எண்ணமோ அவர்களிடம் இருக்காது. மாறாக அவர்கள், நான் வக்ஃபே நவ் ஆவேன். நான் எந்தத் துறையில் சேர வேண்டும் என ஜமாஅத் அமைப்பும், காலத்தின் கலீஃபாவும் எனக்கு கூறுங்கள் என்று அவர்கள் கேட்பர். எனக்கு உலகம் ஒரு பொருட்டே அல்ல. எனது தாய் எனது பிறப்பிற்கு முன்னர் எந்த நோக்கத்துடன் வக்ஃப் செய்தார்களோ மேலும் எனது பிறப்பிற்கு முன் எனக்காக என்ன துஆவை செய்தாரோ அதுவே எனக்கு முக்கியமாகும். மேலும் நான் உலகத்திற்குப் பகரமாக மார்க்கத்தை தேட வேண்டும் என்ற வகையில் எனது தாய் எனக்கு தர்பிய்யத் வழங்கியுள்ளார். எனது தாயின் துஆவை அல்லாஹ் ஒப்புக் கொண்டது எனது நற்பாக்கியமாகும். தர்பிய்யத்திற்காக எனது தாய் செய்த முயற்சிகளை அல்லாஹ் வெற்றி அடையச் செய்துள்ளான். இப்போது நான் எந்த உலகப் பேராசையும் இன்றி மார்க்கத்திற்காக மட்டும் என்னை நான் வக்ஃப் செய்கிறேன். வக்ஃபே நவ் பிள்ளைகள் 15 –வது வயதில் தனது வக்ஃபை புதுப்பிக்கின்றபோது முதலில் இந்த எண்ணத்தை வெளிப்படுத்துவது அவசியமாகும். அதற்காக நான் சம்பந்தப்பட்ட துறைக்கு முறையாக வழிகாட்டுதல்களை வழங்கியுள்ளேன். 15 வயதில் நாங்கள் வக்ஃபை தொடர விரும்புகிறோம் அல்லது தொடர்வோம் என்பதை எழுத்துப்பூர்வமாக அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளுங்கள் என நான் கூறியுள்ளேன். பின்னர் 21 –வது வயதில் அல்லது கல்வியை முடித்த பிறகு எவரெல்லாம் ஜாமிஆவில் பயிலவில்லையோ அவர்கள் அனைவரும் அந்த ஒப்பந்தத்தை மீண்டும் எழுதிக் கொடுக்க வேண்டும்.

அடுத்து, இன்ன துறையில் பயிற்சி பெற்று வாருங்கள் என ஒருவரிடம் சொல்லப்பட்டால் அத்தகைய நபரிடமும் மீண்டும் எழுதிப் பெறப்பட வேண்டும். ஆக, ஒவ்வொரு கட்டத்திலும் வக்ஃபே நவ் பிள்ளைகள் தமது உள்ளத்தின் விருப்பத்திற்கேற்ப சுயமாக வக்ஃபை நிலைநிறுத்துவதற்கான வெளிப்பாட்டை செய்தல் வேண்டும். நான் கூறியது போன்று இது தொடர்பாக இதற்கு முன்னரும் விளக்கமாக பலமுறை எடுத்துக் கூறியுள்ளேன். நாம் வக்ஃப் செய்து விட்டால் எவ்வாறு நாம் உலகியல்ரீதியாக நமது வாழ்க்கையை கழிப்போம்? என்ற சிந்தனை எந்த வக்ஃபே நவ் பிள்ளைகளுக்கும் இருக்கக் கூடாது அல்லது நாம் எப்படி நமது தாய், தந்தையருக்கு பொருளாதாரத்தில் உதவ முடியும்? என்றோ அல்லது வேறு வகையில் எப்படி பெற்றோருக்கு தொண்டாற்ற முடியும்? என்றோ அவர்களுக்கு சந்தேகங்கள் எழக் கூடாது. கடந்த நாட்களில் இங்கு வக்ஃபே நவ் பிள்ளைகளுக்காக வகுப்பு ஒன்றை நான் நடத்தினேன். அதில் ஒரு பையன் என்னிடம், நாங்கள் எங்களை வக்ஃப் செய்து முழு நேரமும் ஜமாஅத்திற்கு தொண்டாற்ற அர்ப்பணித்து விட்டால் எங்களது பெற்றோர்களுக்கு எங்களால் எப்படி பொருளாதார உதவி செய்ய முடியும்? அல்லது அவர்களுக்கான ஏனைய தொண்டுகளை எவ்வாறு எங்களால் ஆற்ற இயலும்? எனக் கேட்டான். நாங்கள் உன்னை வக்ஃப் செய்து விட்டோம். இனி நீ ஜமாஅத்தின் அமானிதமாகவே எங்களிடம் இருக்கின்றாய். மற்ற உனது சகோதர சகோதரிகள் எங்களுக்கு தொண்டாற்றுவார்கள். நீ உன்னை முற்றிலும் காலத்தின் கலீஃபாவிடம் ஒப்படைத்து அவர்களின் கட்டளைக்கேற்ப நீ செயல்பட வேண்டும் என்ற எண்ணத்தை தாய், தந்தையர் குழந்தைப் பருவத்திலேயே வக்ஃபே நவ் பிள்ளைகளிடம் ஊட்டவில்லை என்பது அந்தப் பையனின் கேள்வியிலிருந்து வெளிப்படுகின்றது.

எனவே, பெற்றோர்கள் குழந்தைப் பருவத்திலேயே இந்த எண்ணத்தை ஊட்டி விட வேண்டும். ஹஸ்ரத் மர்யமின் தாய் செய்த துஆவில் *முஹர்ரரன்* என்ற சொல் வந்துள்ளது. அதன் பொருள் என்னவென்றால், நான் இந்த பிள்ளையை உலகக் கடமைகளிலிருந்து முற்றிலும் விடுதலையாக்கி விட்டேன். மேலும், முற்றிலும் மார்க்கத்தின் கடமைகளே அவனது முன்னுரிமையாக இருக்க வேண்டும் என்பதே எனது துஆ ஆகும். எனவே, நான் அந்த தாய், தந்தையரிடம் முதலில் இதனை கூறிக்கொள்ள விரும்புகின்றேன். வக்ஃபே நவ் என்ற பெயர் மட்டும் போதுமானதல்ல. மாறாக, வக்ஃப் செய்யப்பட்ட பிள்ளை இளமைப் பருவத்தை அடையும் வரை பெற்றோர்களின் பொறுப்பு உள்ளது. அதன் பிறகு அந்தப் பிள்ளைகளின் பொறுப்பாகி விடுகின்றது. சில உலகக் கல்வியைக் கற்ற பெண் பிள்ளைகள் வெளிப்படையில் பெரிய உணர்வுகளை வெளிப்படுத்துகின்றனர்; தொண்டாற்றுகின்றனர். ஆனால், பின் நாட்களில் சில உதாரணங்களும் காணக் கிடைக்கின்றன. ஜமாஅத் கொடுக்கும் அலோவன்ஸ் அவர்களுக்கு போதுமானதாக இருப்பதில்லை என்ற காரணத்தால் விலகி விடுகின்றனர். ஒரு பெரிய நோக்கத்தை அடைவதற்கு துன்பத்தை எதிர்க்கொள்வதும் தியாகங்கள் செய்வதும் அவசியமாகும். எனவே, குழந்தைப் பருவம் முதல் வக்ஃபே நவ் பிள்ளைகளின் மூளைகளில் வாழ்க்கையை அர்ப்பணிப்பதை விட பெரிய விஷயம் வேறெதுவும் இல்லை என்ற எண்ணத்தை உருவாக்கி விட வேண்டும். உலக ரீதியில் பிறரைப் பார்ப்பதை விட அல்லது எனது இந்த Class fellow இன்ன கல்வியைக் கற்று இலட்சக்கணக்கில் சம்பாதிக்கின்றார். ஆனால், அவரது ஒரு மாத வருமானத்தில் ஒரு நாள் வருமானத்தைக் கூட என்னால் சம்பாதிக்க முடியவில்லையே என்ற எண்ணம் பிள்ளைகளுக்கு இருக்கக் கூடாது. மாறாக, அவர்களிடம் இந்த சிந்தனையே இருக்க வேண்டும். அதாவது, இறைவன் எனக்கு வழங்கியுள்ள அந்தஸ்து உலகச் செல்வங்களை விட உயர்வானதாகும். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் இந்த வழிகாட்டுதலை அவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். அதாவது, நீங்கள் உலகக் காரணிகளைப் பொருத்தவரை உங்களை விட கீழானவர்களைப் பாருங்கள். ஆன்மீக ரீதியில் உங்களை விட பெரியவர்களைப் பாருங்கள். அந்நிலையில் நீங்கள் உலக விஷயங்களில் முன்னேறுவதற்குப் பகரமாக ஆன்மீக விஷயங்களில் முன்னேறுவதற்கு முயற்சி செய்யுங்கள். (புகாரி கிதாபுர் ரிகாக் பாபு லியன்லுரு இலா மன்ஹுʷவ அஸ்.ʼ.ப்லிஹீ மின்ஹுʷ ஹதீஸ் 6490 - .ʼ.பதஹுʷல் பாரி ஷரஹ் சஹீஹ் புகாரி கிதாபுர் ரிகாக் லியன்லுரு இலா மன்ஹுʷவ அஸ்.ʼ.ப்லிஹீ மின்ஹுʷ ஹதீஸ் 6490 தொகுதி 11 பக்கம் 392 கதீமி குதுப் அச்சகம் ஹானா ஆராம் பாக். கராச்சி)

எனவே, குறிப்பாக தனது கல்வியை முழுமை செய்த வக்ஃபே நவ் பிள்ளைகள் தங்களின் வெளிப்படையான மற்றும் பொருளாதார நிலைகளை மேம்படுத்திக் கொள்வதற்கு முயற்சி செய்வதற்குப் பகரமாக தமது ஆன்மீக நிலைகளை மேம்படுத்திக் கொள்ள முயற்சி செய்யுங்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஒவ்வோர் அஹ்மதியின் தரமும் மிக உயர்வானதாக இருக்க வேண்டும் என எதிர்பார்க்கின்றார்கள். அவ்வாறிருக்க எந்த நபரின் தாய், தந்தையர் அவரது பிறப்பிற்கு முன்பாகவே மார்க்கத்திற்காக அவரை அர்ப்பணித்து விட்டார்களோ அவருக்காக துஆவும் செய்திருக்கின்றார்களோ அத்தகைய நபர் இந்த உயர் தரத்தை அடைவதற்கு எந்த அளவு முயற்சி செய்ய வேண்டும்?

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: எனது ஜமாஅத்திற்கு இதனை வஸிய்யத் செய்வதை நான் எனது கடமையாக கருதுகிறேன். இனி அவர் விரும்பினால் இதனை கேட்கலாம் அல்லது கேட்காமல் இருக்கலாம். எவர் ஒருவர் இரட்சிப்பை விரும்புகிறாரோ மேலும் தூய்மையான மற்றும் நிரந்தரமான வாழ்வைத் தேடுகின்றாரோ அவர் அல்லாஹ்வுக்காக தமது வாழ்வை அர்ப்பணிக்கட்டும். எனது வாழ்க்கை, எனது மரணம், எனது தியாகங்கள், எனது தொழுகைகள் அல்லாஹ்வுக்காக உள்ளன என்று அவர் கூறும் நிலையை அடையும் வகையிலான எல்லா முயற்சிகளையும் அவர் மேற்கொள்ள வேண்டும். மேலும் أَسْلَمْتُ لِرَبِّ الْعَالَمِينَ நான் எனது ரப்பிற்கு கட்டுப்பட்டு விட்டேன் **(2:132)** என இப்ராஹீம் (அலை) அவர்கள் கூறியது போன்று அவரது உள்ளம் கூற வேண்டும். மனிதன் இறைவனிடம் தன்னை மாய்த்துக் கொள்ளாதவரை இறைவனுக்காக தன்னை ஆக்கிக் கொண்டு மரணிக்காத வரை அவரால் புதிய வாழ்வைப் பெற முடியாது. எனவே, என்னுடன் தொடர்பு கொண்டுள்ள நீங்கள்

இறைவனுக்காக வாழ்க்கையை அர்ப்பணிப்பதை உங்களது வாழ்க்கையின் அசல் நோக்கமாகக் கருதுங்கள். இதுவே அடிப்படையும் நோக்கமும் ஆகும் என்பதை பார்க்கின்றீர்கள்.

இனி நீங்கள் உங்களை ஆய்வு செய்யுங்கள். உங்களில் எத்தனை நபர்கள் நீங்கள் தனது இந்த செயலை தமக்காக விரும்புகின்றார். இறைவனுக்காக தமது வாழ்க்கையை அர்ப்பணிப்பதை எத்தனை நபர்கள் நேசத்திற்குரியதாகக் கருதுகின்றீர்கள்? (மல்ஃபூஸாத் தொகுதி 2 பக்கம் 100; 1985 -ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) எனவே, வக்ஃபே நவ் பிள்ளைகள் சாதாரண அஹ்மதியாக இருப்பதிலிருந்து முன்னேறிச் சென்று இந்த அந்தஸ்தை அடைய முயற்சி செய்ய வேண்டும். மற்றவர்களும் மார்க்கத்திற்காக தங்களை அர்ப்பணிக்கின்றனர். எல்லாராலும் தங்களை வக்ஃப் செய்யவும் முடியாது. உங்களில் ஒரு கூட்டம் மார்க்கக் கல்வியைக் கற்று பிறகு திரும்பிச் சென்று பிறரை மார்க்கத்தின் பக்கம் அழைக்க வேண்டும் எனவும் அல்லாஹ் கூறியுள்ளான்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வாறும் கூறியுள்ளார்கள்: உலகப் பணிகளில் ஈடுபட்டிருந்தாலும் இறையச்சமும் மார்க்கமும் முதன்மையாக இருக்க வேண்டும். (மல்ஃபூஸாத் தொகுதி 2 பக்கம் 91; 1985 -ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) வக்ஃபே நவ் பிள்ளைகள் தமது போதுமென்ற மனதின் தரத்தை மிகவும் அதிகரித்துக் கொள்ள வேண்டும். தமது தியாகத்தின் தரத்தை மிகவும் அதிகரிக்க வேண்டும். நாம் பொருளாதார ரீதியாக பின்தங்கி இருப்பதால் நமது சகோதர சகோதரிகள் நம்மை இழிவானவர்களாகக் கருதுவார்கள் என்ற எண்ணம் கூடாது அல்லது மற்றவர்களை கவனிப்பது போன்று பெற்றோர்கள் நம்மை கவனிக்க மாட்டார்கள் என்ற எண்ணமும் கூடாது. வக்ஃபே நவ் பிள்ளைகள் கீழானவர்கள் என்ற எண்ணம் முதலில் பெற்றோர்களுக்கு இருக்கக் கூடாது. வக்ஃபே நவ் பிள்ளைகளின் அந்தஸ்து மிகவும் உயர்வானதாகும் என்ற சிந்தனை தான் பெற்றோர்களுக்கு இருக்க வேண்டும்.

ஆனால், வக்ஃபே நவ் பிள்ளைகள் உலகின் தாழ்மையான அடியாராக எப்போதும் தம்மை கருத வேண்டும். வக்ஃபே நவ் பிள்ளைகள் எங்கு தமது தியாகத்தின் தரத்தை உயர்த்த வேண்டுமோ அங்கு தமது இறை வணக்கத்தின் தரத்தையும் அதிகரிக்க வேண்டும். தமது நன்றியுணர்வின் தரத்தையும் அதிகரிக்க வேண்டும். தமது பெற்றோர்களின் உடன்படிக்கையை நிறைவேற்ற தமது அனைத்து ஆற்றல்களையும், திறமைகளையும் பயன்படுத்த முயற்சி செய்ய வேண்டும். மார்க்கத்திற்காக அதனை பயன்படுத்த முயற்சி செய்ய வேண்டும். மார்க்கத்தின் வெற்றிக்காக பணி செய்ய முயற்சி செய்ய வேண்டும். அந்நிலையில் அல்லாஹ்வும் அருள் செய்கின்றான். கூலியின்றி வெறும் கையுடன் எவரையும் இறைவன் அனுப்புவதில்லை.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் தனது உடன்படிக்கைகளை நன்றியுணர்வுடன் நிறைவேற்றுவதன் பக்கம் கவனமூட்டியவாறு அறிவுரை வழங்குகின்றார்கள். அவர்கள் கூறுகின்றார்கள்: وَإِبْرٰهِيْمَ الَّذِيْ وَفّٰى என்ற காரணத்தினாலேயே அல்லாஹ் ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களை திருக்குர்ஆனில் பாராட்டியுள்ளான். அதாவது, அவர்கள் செய்த உடன்படிக்கையை அவர்கள் முழுமை செய்து காட்டினார். (மல்ஃபூஸாத் தொகுதி 6 பக்கம் 234; 1985 -ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) எனவே, உடன்படிக்கைகளை நிறைவேற்றுவது சாதாரண காரியமல்ல. மேலும், வாழ்க்கையை அர்ப்பணிக்கின்ற உடன்படிக்கை மிகவும் மகத்துவமிக்க உடன்படிக்கையாகும். அது தொடர்பான ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வேதனை மிக்க வார்த்தைகளை நாம் செவிமடுத்துள்ளோம்.

வக்ஃபே நவ் ஆண் பிள்ளைகளும், பெண் பிள்ளைகளும் தமது உடன்படிக்கையில் முழுமை செய்யக் கூடியவர்களாகத் திகழ்ந்தால் உலகில் நம்மால் ஒரு புரட்சியை ஏற்படுத்த முடியும். சில இளம் தம்பதிகள் என்னிடம் வருகின்றனர். நானும் வக்ஃபே நவ், எனது மனைவியும் வக்ஃபே நவ், எனது பிள்ளையும் வக்ஃபே நவ் என்று என்னிடம் கூறுகின்றனர். இது மிகவும் பாராட்டப்பட வேண்டிய விஷயம்தான். ஆனால் அவர்கள் தனது வக்ஃபின் உடன்படிக்கையை நன்றியுணர்வுடன் நிறைவேற்றும் போதுதான் அதற்கான உண்மையான பலன் ஜமாஅத்திற்கு கிடைக்கும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் தொடர்பாக நன்றியுணர்வின் கருத்தை ஓரிடத்தில் இவ்வாறு விளக்குகின்றார்கள். அன்னார் கூறுகின்றார்கள்: இறை நெருக்கத்தைப் பெறுவதற்குரிய வழி என்னவென்றால் அவனுக்காக உண்மையை வெளிக்காட்ட வேண்டும். உண்மையில் நிலைநிற்க வேண்டும். அல்லாஹ் உடனான நன்றியுணர்வு உண்மையானதாக இருக்க வேண்டும்.

ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் பெற்ற இறை நெருக்கத்திற்கும் இதுவே காரணமாக இருந்தது. அல்லாஹ் கூறினான்: وَإِبْرٰهِيْمَ الَّذِيْ وَفّٰى இப்ராஹீம் யாரென்றால் அவர் நன்றியுணர்வை வெளிப்படுத்திக் காட்டினார். இறைவனுடன் நன்றியுணர்வையும் உண்மையையும் பற்றையும் வெளிப்படுத்துவது என்பது ஒரு வகையான மரணத்தை விரும்புகின்றது. மனிதன் உலகம் மற்றும் அதன் அனைத்து சுகபோகங்கள் மற்றும் கண்ணியத்தை இழந்து விடத் தயாராகாத வரை மேலும் எல்லா வகையான இழிவு, கடினம் மற்றும் வறுமையை இறைவனுக்காக சகித்துக் கொள்வதற்கு தயாராகாத வரை இந்த பண்பு மனிதனிடம் உருவாக முடியாது. மனிதன் மரம் அல்லது கல்லை வணங்குவது மட்டும் சிலை வணக்கம் அல்ல. மாறாக, அல்லாஹ்வின் நெருக்கத்திற்கு தடையாக நிற்கும் ஒவ்வொரு விஷயமும் சிலைதான். மனிதன் தன்னுள் எந்த அளவுக்கு அந்த சிலைகளை வைத்திருக்கின்றான் என்றால் நான் சிலையை வணங்குகின்றேன் என்பதை அவன் உணர்வதே இல்லை. இன்றைய காலத்தில் சிலருக்கு நாடகங்கள் சிலையாக உள்ளது. சிலருக்கு இன்டர்நெட் சிலையாக உள்ளது. சிலருக்கு உலக சம்பாத்தியம் சிலைகளாக உள்ளன. இன்னும் சிலருக்கு பலவகையான ஆசைகள் சிலைகளாகி விட்டன. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியது போன்று 'நான் சிலை வணக்கம் செய்கிறேன்' என்பதே மனிதனுக்கு தெரிவதில்லை.

எனவே, மனிதன் இறைவனுக்காக முழுமையாக ஆகி விடாத வரை அவன் வழியில் எல்லா வகையான கஷ்டங்களையும் சகித்துக் கொள்ள தயாராகாத வரை அவரிடம் உண்மை மற்றும் நன்றியுணர்வு உருவாகுவது கடினமாகும்.

ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களுக்கு சாதாரணமாக அந்தப் பட்டம் கிடைத்து விடவில்லை. தனது மகனை தியாகம் செய்வதற்கு அவர்கள் ஆயத்தமானபோதுதான் وَإِبْرٰهِيْمَ الَّذِيْ وَفّٰى என அழைக்கப்பட்டார்கள். அல்லாஹ் செயல்களையே விரும்புகின்றான். செயல்கள் மூலமாக மட்டுமே அவன் மனிதனிடம் திருப்தி கொள்கிறான். செயல் என்பது துன்பத்தை சகித்துக் கொள்வதன் மூலமாகவே கிடைக்கின்றது.

அதாவது மனிதனுக்கு நற்செயல்களாற்றுவதற்கும் அல்லாஹ்வை திருப்தி கொள்ளச் செய்யும் செயல்களைச் செய்வதற்கும் தியாகங்கள் செய்ய நேர்கின்றது. தன்னைத்தானே துன்பத்திலும், கடினத்திலும் ஆழ்த்த நேரிடுகின்றது.

அவர்கள் கூறினார்கள்: ஆனால், மனிதன் எப்போதும் துன்பத்தில் இருப்பதில்லை. செயல்களைச் செய்வதில் துன்பம் இருக்கும். ஆனால், மனிதன் எப்போதும் அந்த துன்பத்தில் இருப்பதில்லை.

மனிதன் இறைவனுக்காக துன்பத்தைச் சுமக்க ஆயத்தமாகி விடும்போது இறைவன் அவனை துன்பத்தில் ஆழ்த்துவதும் கிடையாது. இப்ராஹீம் (அலை) அவர்கள் அல்லாஹ்வின் கட்டளையை நிறைவேற்றுவதற்காக தமது மகனை தியாகம் செய்திட விரும்பியபோது, அதற்கு முழுமையாக ஆயத்தமான போது, அல்லாஹ் அவரது மகனை காப்பாற்றி விட்டான். மகனின் உயிரும் தப்பியது. மகனின் தியாகத்தால் தந்தைக்கு ஏற்படவிருந்த துன்பத்திலிருந்தும் அவருக்கு இரட்சிப்பு கிடைத்தது. ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் நெருப்பில் போடப்பட்டார்கள். ஆனால், நெருப்பு அன்னார் மீது எந்த தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை.

மனிதன் அல்லாஹ்வின் வழியில் துன்பங்களைச் சுமக்க ஆயத்தமாகி விட்டால் அல்லாஹ் துன்பங்களிலிருந்து அவனைக் காப்பாற்றி விடுகின்றான். (மல்ஃபூஸாத் தொகுதி 4 பக்கம் 429-430; 1985 -ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) எனவே, அல்லாஹ்வின் அன்பையும், அருளையும் ஈர்ப்பதற்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நமக்கு காட்டித் தந்துள்ள உயர்தரமான சிந்தனை இதுவேயாகும். நாம் அதனை அடைய வேண்டுமென அன்னார் நம்மிடம் எதிர்பார்க்கின்றார்கள். இந்த தரத்தை அடைவதற்கு வக்ஃபே நவ் பிள்ளைகள் மட்டுமல்ல; வாழ்க்கையை அர்ப்பணித்த அனைவரும் முயற்சி செய்ய வேண்டும். மேலும் தியாகங்களின் தரத்தில் நாம் முன்னேறாதவரை வாழ்க்கையை அர்ப்பணித்து விட்டோம் என்ற வாதம் வீணானதாகும் என்பதை அனைவரும் நினைவில் கொள்ள வேண்டும்.

சில தாய்மார்கள் கூறுகின்றனர். நாங்கள் கனடா வந்து விட்டோம். எங்களது மகன் பாகிஸ்தானில் முரப்பியாக அல்லது வாழ்க்கையை அர்ப்பணித்தவராக


## சுத்தமான தேன் கிடைக்கும்

**ஆரோக்கியமான வாழ்விற்கு தேனியியல் மருந்து *(Honey Medicine)* கிடைக்கும்.**

**Dr. M.J. அக்பர் அலி**
B.Com., M.A., B.Ed., PGD Y&N, RMP (Homeo)
Institute of Honey bees' Medicine Education Research & Sales
101 B/1, First Floor, Nethaji Road, Melapalayam,
Tirunelveli - 627 005 Ph : +91 95006 62284


## திருக்குர்ஆனிலிருந்து

(மக்களை) நன்மையின் பக்கம் அழைக்கவும் நல்லவற்றைப் போதித்து தீமையைத் தடுக்கவும் செய்யும் ஒரு கூட்டம் (எப்போதும்) உங்களிடையே இருந்து வர வேண்டும். இவர்களே வெற்றி பெறுவோர். (3:105)


**A. பஷீர் அஹ்மது**
வக்ஃபே ஜதீது செயலர், மேலப்பாளையம். Ph : +91 98437 22215

உள்ளார். அவரையும் இங்கு அழைத்து இங்கேயே அவரை பணி அமர்த்த வேண்டும் என கூறுகின்றனர். அவர் எங்களுக்கு அருகில் இருக்க வேண்டும் என விரும்புகின்றனர். வக்ஃப் செய்து விட்ட பிறகு இவ்வாறு வேண்டுவதும் விண்ணப்பம் செய்வதும் எப்படி பொருத்தமாக இருக்க முடியும்? ஆசைகள் முடிந்து விட வேண்டுமே! நான் கூறியது போன்று வக்ஃப் செய்வதற்கான எண்ணம் அதிகரிக்கின்றது. அது மிகவும் நல்ல விஷயம்தான். ஆனால், இந்த எண்ணத்தை அல்லாஹ்வுக்காக தூய்மையாக்கிக் கொண்டவாறு அதிகரிக்க வேண்டுமே தவிர, நிலைமை மாறி விட்ட பிறகு தனது உடன்படிக்கையை பலவீனமாக்குபவர் –களாகவோ அல்லது அதனை முறிப்பவர்களாகவோ நீங்கள் ஆகிவிடக் கூடாது. துன்பமும், துயரமுமின்றி தியாகங்கள் செய்யப்பட முடியாது என ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியுள்ளார்கள்.

நிலைமை மாறி விட்டால் அதனை சகித்துக் கொள்ள வேண்டும். அதிலும் குறிப்பாக தங்களை வக்ஃப் செய்து கொண்ட நபர்கள் அல்லது எவர்களின் தாய், தந்தையர் அவர்களை வக்ஃப் செய்தனரோ அவர்களும் பின்னர் தனது வக்ஃபை புதுப்பித்துக் கொண்ட நபர்களும் கஷ்டங்களைச் சகிக்க வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியது போன்று எவர் இறைவனுக்காக தன்னை துன்பத்தில் ஆழ்த்திக் கொள்ளத் தயாராகி விடுகின்றாரோ அவர் மீது இறைவன் அருள் செய்கின்றான். அவரை வெறுங்கையோடு அனுப்புவதில்லை. அளவில்லாமல் அருள் செய்கின்றான். அனைத்து வக்ஃபே நவ் பிள்ளைகளும் அவர்களது பெற்றோர்களும் வக்ஃபின் உயிரோட்டத்தைப் புரிந்தவாறு தமது உடன்படிக்கையை நிறைவேற்ற அல்லாஹ் அருள் செய்வானாக! மேலும் அவர்கள் தமது நன்றியுணர்வின் தரத்தை உயர்ந்ததாக ஆக்கிக் கொண்டே செல்பவர்களாகத் திகழட்டுமாக!

சுருக்கமாக, நான் சில நிர்வாக விஷயங்கள் மற்றும் வக்ஃப் செய்தவர்களின் செயல் திட்டத்தின் பக்கம் கவனமூட்ட விரும்புகிறேன். சிலர் கேள்வி எழுப்புகின்றனர். சிலர் வக்ஃபே நவ் பிள்ளைகளின் எண்ணங்களில் தவறான விஷயத்தை விதைக்கின்றனர். அவர்களுக்கு தனித்துவ அடையாளம் இருக்கின்றது என்று கூறுகின்றனர். நிச்சயமாக அவர்களுக்கு தனித்துவ அடையாளம் உள்ளது. ஆனால், அந்த அடையாளத்தின் காரணமாக அசாதாரண முறையில் அவர்களுடன் தனிச்சிறப்புடன் நடந்து கொள்ளப்பட மாட்டாது. மாறாக, அவர்கள் தமது தனித்துவ அடையாளத்துடன் தமது தியாகத்தின் தரத்தை அதிகரிக்க வேண்டும்.

சிலர் தமது வக்ஃபே நவ் பிள்ளைகளின் உள்ளங்களில் நீங்கள் மிகவும் சிறப்பான பிள்ளைகள் என்ற எண்ணத்தை விதைத்து விடுகின்றனர். அதன் விளைவாக அவர்கள் பெரியவர்களான பின்னரும் தாம் மிகவும் சிறப்பானவர்கள் என்ற எண்ணமே அவர்களின் மூளையில் எஞ்சி நிற்கின்றது. இதுபோன்ற விஷயங்கள் எனக்கு இங்கு வந்தடைந்துள்ளன. அவர்கள் வக்ஃபின் உண்மைத்துவத்தைப் புறந்தள்ளி விடுகின்றனர். மேலும் வக்ஃபே நவ் என்ற அடைமொழியை மட்டுமே தமது வாழ்வின் நோக்கமாகக் கருதுகின்றனர். நாங்கள் சிறப்பானவர்கள் என்று தம்மை கருதுகின்றனர்.

நாங்கள் வக்ஃபே நவ் ஆவோம். எனவே பெண் பிள்ளைகள் என்றால் நாஸிராத் அல்லது லஜ்னாவின் நிகழ்ச்சிகளில் பங்கு பெற அவசியமில்லை என கருதுகின்றனர். அதேபோன்று ஆண் பிள்ளைகள் என்றால் அத்ஃபால் அல்லது குத்தாம் அமைப்பின் நிகழ்ச்சிகளில் பங்கு பெற வேண்டிய அவசியம் தமக்கில்லை என்ற எண்ணம் சிலரது உள்ளத்தில் உள்ளது. நமது அமைப்பு ஒரு தனி அமைப்பாக ஆகி விட்டது என எண்ணம் கொள்கின்றனர். ஒருவரது உள்ளத்தில் இப்படிப்பட்ட எண்ணம் இருக்கும் என்றால் அது முற்றிலும் தவறான எண்ணமாகும். ஜமாஅத்தின் பொறுப்பாளர்கள் மற்றும் அமீர்மார்கள் கூட தமது வயதிற்கேற்ப சம்பந்தப்பட்ட கிளை அமைப்பின் உறுப்பினர் ஆவார். எனவே, வக்ஃபே நவ் ஆண், பெண் பிள்ளைகள் நினைவில் கொள்ள வேண்டும். அவர்கள் தத்தமது வயதிற்கேற்ப கிளை அமைப்பின் உறுப்பினர்கள் ஆவர். அந்தந்த அமைப்பின் நிகழ்ச்சிகளில் பங்கு பெறுவது அவர்களுக்கு கட்டாயமானதாகும். எவர் அவ்வாறு பங்கு பெறுவதில்லையோ அவர்களைப் பற்றி சம்பந்தப்பட்ட அமைப்பின் தலைவர் ரிப்போர்ட் செய்ய வேண்டும். அந்த வக்ஃபே நவ் பிள்ளையின் சீர்திருத்தம் ஏற்படவில்லையென்றால் பின்னர் அதுபோன்ற பிள்ளைகள் வக்ஃபே நவ் திட்டத்திலிருந்து வெளியேற்றப்படுவர். ஆயினும், சில ஜமாஅத் நிகழ்ச்சிகளும் இருக்கின்றன என்றால், எல்லாரும் எந்த சிக்கலுமின்றி ஒவ்வோர் அமைப்பும் தத்தமது நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு ஏதுவாகவும் அதில் பங்கு பெறுவதற்கு ஏதுவாகவும் தங்களுக்குள் ஒன்றிணைந்து பேசி நிகழ்ச்சிகளை நடத்த வேண்டும். எந்த மோதலும் இல்லாத நிலை இருக்க வேண்டும். இதை சிறப்பாக கவனத்தில் கொள்ள வேண்டும்.

நான் கூறியது போன்று வக்ஃபே நவ் பிள்ளைகள் மிகவும் சிறப்பானவர்கள் என்ற எண்ணம் உள்ளது. ஆனால் சிறப்பானவர்களாக இருப்பதை அவர்கள் நிரூபித்துக் காட்ட வேண்டும். எப்படி நிரூபிக்க வேண்டும்? இறைவன் உடனான தொடர்பில் மற்றவர்களை விட முன்னேறியிருக்க வேண்டும். அப்போது தான் அவர்கள் சிறப்பானவர்கள் என கூறப்படுவர். அவர்களிடம் மற்றவர்களை விட இறையச்சம் அதிகமாக இருக்க வேண்டும். அப்போதுதான் அவர்கள் சிறப்பானவர்கள் எனக் கூறப்படுவர். அவர்களின் இறை வணக்கத்தின் தரம் மற்றவர்களை விட மிகவும் உயர்ந்ததாக இருக்க வேண்டும். அப்போதுதான் அவர்கள் சிறப்பானவர்கள் என கூறப்படுவர். அவர்கள் ஃபர்ளான தொழுகைகளுடன் நஃபில் தொழுகைகளையும் தொழக் கூடியவர்களாக இருக்க வேண்டும். அப்போதுதான் அவர்கள் சிறப்பானவர்கள் என கூறப்படுவர். அவர்களின் பொதுவான நல்லொழுக்கத்தின் தரம் மிகவும் உயர்வானதாக இருக்க வேண்டும். இது சிறப்பானவர்களின் ஓர் அடையாளமாகும். அவர்களின் பேசும் தன்மை மற்றும் பேச்சாற்றல் ஆகியவை மற்றவர்களிடமிருந்து அவர்களை வேறுபடுத்திக் காட்டும் விதத்தில் தனித்தன்மை கொண்டவையாக இருக்க வேண்டும். சிறப்பாக தர்பிய்யத் பெற்றவர், உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்குபவர் என தெளிவாகத் தெரிய வேண்டும். அப்போதுதான் அவர் சிறப்பானவராக இருப்பார்.

பெண் பிள்ளைகள் என்றால் அவர்களின் பர்தாவும், ஆடையும் சரியான இஸ்லாத்தின் போதனைகளின் வடிவமாக இருக்க வேண்டும். மக்கள் அவர்களைக் கண்டு ஏக்கம் கொள்ள வேண்டும். மேலும், இந்த சுற்றுப்புறத்தில் இருந்த பின்னரும் கூட அவர்களின் ஆடையும், பர்தாவும் அசாதாரண முன்னுதாரணமாக உள்ளது என மக்கள் அவர்களைப் பார்த்து கூற வேண்டும். அப்போதுதான் அவர்கள் சிறப்பானவர்கள் என அழைக்கப்படுவர். ஆண் பிள்ளைகள் என்றால் வெட்கத்தின் காரணமாக அவர்களின் பார்வை தாழ்ந்திருக்க வேண்டும். தவறான விஷயங்களின் பக்கம் இங்கும் அங்கும் பார்வையை வீசுபவர்களாக அவர்கள் இருக்கக் கூடாது. அப்போதுதான் அவர்கள் சிறப்பானவர்கள் ஆவர். இன்டர்நெட் மற்றும் இதர வீணான காரியங்களைப் பார்த்து நேரத்தை செலவிடுவதற்குப் பகரமாக மார்க்க அறிவை வளர்த்துக் கொள்வதற்காக அந்த நேரத்தை செலவிடுபவர்களாக மக்கள் இருக்கும்போதுதான் சிறப்பானவர்களாக அவர்கள் இருப்பர். ஆண் பிள்ளைகளின் முகத்தோற்றம் மற்றவர்களிடமிருந்து அவர்களை பிரித்துக் காட்ட வேண்டும். அப்போதுதான் அவர்கள் சிறப்பானவர்களாக இருப்பர். தினமும் திருக்குர்ஆன் ஓதக் கூடியவர்களாகவும், அதன் கட்டளைகளைத் தேடக் கூடியவர்களாகவும் அதன்படி செயல்படக் கூடியவர் –களாகவும் வக்ஃபே நவ் ஆண், பெண் பிள்ளைகள் திகழும்போதுதான் அவர்கள் சிறப்பான மக்களாக இருப்பர். கிளை அமைப்புகள் மற்றும் ஜமாஅத் நிகழ்ச்சிகளில் தொடர்ந்து முறையாகக் கலந்து கொள்பவர்களாக அவர்கள் இருக்க வேண்டும். அந்நிலையில் அவர்கள் சிறப்பானவர்கள்தான். பெற்றோர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்ளுதல் மற்றும் அவர்களுக்காக துஆ செய்வதில் தமது மற்ற சகோதர சகோதரிகளை விட அவர்கள் முன்னேறியுள்ளார்கள் என்றால் அது அவர்களது சிறப்புதான். திருமண பந்தத்தின் போது ஆணும், பெண்ணும் உலகத்தைப் பார்ப்பதற்குப் பதிலாக மார்க்கத்தைப் பார்ப்பவராக இருந்தால், மேலும் திருமண பந்தத்தைப் பேணக் கூடியவர்களாக அவர்கள் திகழ்ந்தால் அவர்கள் சிறப்பானவர்கள் என்று நம்மால் கூற இயலும். மார்க்க வழிகாட்டுதலின்படி செயல்பட்டவாறு தமது திருமண பந்தத்தை நிறைவேற்றினால் அவர்கள் சிறப்பானவர்கள் என்று நம்மால் கூற இயலும். அவர்களிடம் மற்றவர்களைக் காட்டிலும் சகிப்புத்தன்மை அதிகமாக இருந்தால், சண்டை சச்சரவு மற்றும் குழப்பங்களிலிருந்து விலகியிருக்கக் கூடியவராக சமாதானம் செய்து வைப்பவராக அவர்கள் இருந்தால் அவர்கள் சிறப்பானவர்கள் என அழைக்கப்படுவர். தப்லீக் மைதானத்தில் மற்ற அனைவரையும் விட முன்னால் சென்று அந்தக் கடமையை நிறைவேற்றினால் அவர்கள் சிறப்பானவர்கள் எனக் கூறப்படுவர். கிலாஃபத்திற்கு கட்டுப்படுதல் மற்றும் கலீஃபாவின் தீர்ப்பின்படி செயல்படுவதில் முதல் வரிசையில் நின்றால் அவர்கள் சிறப்பானவர்கள்தான். மற்றவர்களை விட கடின உழைப்பு செய்பவராகவும், தியாகங்கள் செய்பவராகவும் இருந்தால் அவர்கள் நிச்சயமாக

## திருக்குர்ஆனிலிருந்து

நீங்கள், உங்கள் இறைவனிடமிருந்து இறங்கக்கூடிய மன்னிப்பின்பாலும், வானங்கள், பூமி ஆகியவற்றின் மதிப்பைக் கொண்டதும் இறையச்சமுடையோருக்கு ஏற்படுத்தப் -பட்டுள்ளதுமான சொர்க்கத்தின்பாலும் விரைந்து செல்லுங்கள். (3:134)

**ஜலாலுத்தீன்**

ஸயீம், மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ், தூத்துக்குடி.

Ph : +91 98409 17179

**O.A.N. DOORS & STEELS**

**O.A.N. டோர்ஸ் & ஸ்டீல்ஸ்**

*All Types of wodden Doors, Skin Doors, Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals*

Ambai Road, (Opp. Karuna Clinic),
Kulavanikarpuram, Tirunelveli - 627 005

O.A. NIJAM - 99947 571772 V.A. SAIT - 99430 30230

சிறப்பானவர்கள்தான். பணிவு மற்றும் தன்னலமற்ற தன்மையில் எல்லாரையும் விட முன்னேறியிருந்தால் ஆணவத்தின் மீதான வெறுப்பு மற்றும் அதற்கு எதிராக ஜிஹாது செய்பவராகவும் அவர்கள் இருந்தால் நிச்சயமாக அத்தகையோர் மிகவும் சிறப்பானவர்களே! M.T.A –வில் எனது குத்பாவை கேட்கக் கூடியவர்கள் மற்றும் எனது அனைத்து நிகழ்ச்சிகளையும் பார்க்கக் கூடியவர்கள் என்றால் நிச்சயமாக அத்தகையோர் மிகவும் சிறப்பானவர்களே! அல்லாஹ்வுக்கு விருப்பமான இந்த அனைத்து விஷயங்களையும் அவர்கள் மேற்கொள்பவர்கள் என்றால், அதேபோன்று அல்லாஹ் தடுத்த அனைத்து காரியங்களிலிருந்து தன்னை தடுத்து நிறுத்திக் கொள்பவர்கள் என்றால் அத்தகையோர் நிச்சயமாக மிக மிக சிறப்பானவர்கள் ஆவர். இல்லையென்றால் உங்களுக்கும் மற்றவர்களுக்கும் இடையில் எந்த வித்தியாசமும் இருக்காது. இதனை பெற்றோர்களும் நினைவில் கொள்ள வேண்டும். இதனை கருத்தில் கொண்டவாறு தமது பிள்ளைகளுக்கு தர்பிய்யத் வழங்க வேண்டும்.

இந்த விஷயங்கள் உங்களிடம் இருக்க வேண்டும். ஏனென்றால், உலகில் புரட்சியை ஏற்படுத்துவதற்கான காரணியாக உங்களை அல்லாஹ் ஆக்கியுள்ளான். இவை இல்லையென்றால், மேலும் உலகம் பார்க்கும் வகையில் உங்கள் முன்னுதாரணம் இல்லையென்றால் தனது உடன்படிக்கைகளை நிறைவேற்றாததன் காரணமாகவும், தனது நன்றியுணர்வின் உயர் தரத்தை முழுமையாக நிறைவேற்றாததன் காரணமாகவும் அல்லாஹ்வின் பார்வையில் நன்றி கெட்டவர்களாகவும் உடன்படிக்கையை முறித்த மக்களாகவும் நீங்கள் கணக்கிடப்படுவீர்கள். எனவே, தர்பிய்யத்தின் காலக்கட்டத்தைக் கடக்கும்போது தாய், தந்தையரே பொறுப்பாளிகள் ஆவீர்கள். இந்த வகையில் தமது பிள்ளைகளை அவர்கள் சிறப்பானவர்களாக மாற்ற வேண்டும். பெரியவர்களான பிறகு இந்த வாகிஃபீனே நவ் பிள்ளைகள் சுயமாகவே சிறப்பான தரத்தை அடையக் கூடியவர்களாகத் திகழ்வார்கள். நான் கூறியது போன்று தனது உலகக் கல்விக்கு இடையில் பல்வேறு காலக்கட்டத்தில் நான் எந்தத் துறையில் செல்ல வேண்டும் என பிள்ளைகள் ஜமாஅத் அமைப்பிடம் கேட்க வேண்டும். அது அல்லாமல் சுயமாக முடிவெடுக்கக் கூடாது. வாகிஃபீனே நவ் பிள்ளைகள் துறைகளைத் தேர்ந்தெடுப்பது தொடர்பாக நான் முன்னரே கூறியிருக்கிறேன். ஜாமிஆவில் சென்று முபல்லிக் ஆவதற்கு முன்னுரிமை வழங்க வேண்டும். அதற்கு தற்போது தேவை உள்ளது. அல்லாஹ்வின் அருளால் ஜமாஅத் பரவி வருகிறது. எந்த நாட்டில் ஜமாஅத் நீண்ட காலமாக நிலைபெற்றுள்ளதோ அங்கு மட்டுமல்லாமல் எங்கு ஜமாஅத் நிலைநாட்டப்பட்டு சில காலங்களே ஆகின்றதோ அங்கு கூட இன்னும் சொல்லப்போனால் புதிய புதிய நாடுகளில் கூட ஜமாஅத் உருவாகி வருகிறது. நமக்கு ஒவ்வொரு நாட்டிலும் ஏராளமான முபல்லிக்குகள் தேவைப்படுகின்றனர்.

அடுத்து பாகிஸ்தானின் ரப்வாவிலுள்ள நமது மருத்துவமனைகளில் பல துறைகளில் தேர்ச்சி பெற்ற மருத்துவர்கள் தேவைப்படுகின்றனர். காதியான் மருத்துவமனையில் மருத்துவர்களின் தேவை உள்ளது. இங்கிருந்து அங்கு செல்ல முடியாவிட்டாலும் என்னுடைய குத்பாவை கேட்கக் கூடியவர்கள் தத்தமது நாட்டிலேயே இதன் பக்கம் கவனம் செலுத்துங்கள். குறிப்பாக வாகிஃபீனே நவ் கவனம் செலுத்துங்கள். தேர்ச்சி பெற்ற தேர்ந்த மருத்துவர்களின் தேவை உள்ளது. மிகப்பெரிய இடைவெளி உள்ளது. நம்மிடம் பல துறைகளில் வல்லுனர்களான மருத்துவர்கள் குறைவாகவே உள்ளனர். ஆப்பிரிக்காவில் மருத்துவர்கள் தேவைப்படுகின்றனர். எல்லா துறையைச் சார்ந்த மருத்துவர்களும் தேவைப்படுகின்றனர். அடுத்து கோயிட்டன்வாலாவில் பெரிய மருத்துவமனை கட்டப்பட்டு வருகிறது. கனடாவிலிருந்தும் மருத்துவர்கள் அங்கு செல்லலாம். இங்கும் மருத்துவர்களின் தேவை இருக்கின்றது. இன்னும் தேவை அதிகரிக்கும். இந்தோனேஷியாவில் தேவை உள்ளது. ஜமாஅத் பரவிச் செல்ல செல்ல இந்தத் தேவை இன்னும் அதிகரிக்கும். எனவே, Specialist செய்யப்பட்டு, இந்த நாடுகளில் உயர்தரமான கல்வி கற்று அனுபவங்களைப் பெற்றவாறு வக்ஃபே நவ் பிள்ளைகள் குறிப்பாக மருத்துவர்களாக பயின்று வருபவர்கள் இந்த பணிகளுக்கு முன் வர வேண்டும். மேலும், எந்தெந்த நாடுகளில் செல்வது எளிதோ அங்கு செல்ல வேண்டும். உங்களை நீங்கள் அதற்கு முன்னிலைப்படுத்துங்கள். பின்னர் ஜமாஅத் உங்களை அனுப்பி வைத்து விடும். அடுத்து பள்ளிகளுக்கு ஆசிரியர்கள் தேவை. மருத்துவர்கள் மற்றும் ஆசிரியர்களாக ஆண், பெண் இருவரும் பயன்படுவர்.

எனவே, இதன் பக்கம் கவனம் செலுத்துங்கள். Architech மற்றும் Builders தேவை. அவர்கள் கட்டடத் துறைகளில் வல்லுனர்களாக இருக்க வேண்டும். பள்ளிவாயில்கள், மிஷன் ஹவுஸ்கள், பள்ளிகள் மற்றும் மருத்துவமனை கட்டுமானப் பணிகளில் அவர்கள் சரியான மேற்பார்வை மற்றும் திட்டமிடுதல் செய்து ஜமாஅத்தின் செல்வங்களைப் பாதுகாக்க முடியும். குறைவான செலவில் நிறைய வசதிவாய்ப்புகளை ஏற்படுத்தித் தர முடியும். அடுத்து, Para Medical ஊழியர்களும தேவைப்படுகின்றனர். அந்த துறையில் உள்ளவர்களும் முன் வர வேண்டும். இவை தற்போது ஜமாஅத்திற்கு தேவைப்படும் மிக முக்கியமான ஒரு சில துறைகளாகும். எதிர்காலத்தில் காலத்தின் சூழலிற்கேற்ப தேவை அதிகரிக்கும். சில வக்ஃபே நவ் பிள்ளைகளுக்கு சில துறைகளில் தனிப்பட்ட ஆர்வம் இருக்கின்றது. அவர்கள் என்னிடம் கேட்கும்போது அவர்களின் ஆர்வத்தைக் கண்டு நான் அவர்கள் விரும்பிய பாடத்தைப் படிக்க அனுமதி அளிக்கின்றேன். ஆனால், மாணவர்களுக்கு ஒன்றை கூறுவேன். அவர்கள் அறிவியலின் பல்வேறு துறைகளில் ஆராய்ச்சியிலும் செல்ல வேண்டும். பொதுவாக வக்ஃபே நவ் பிள்ளைகளும் மற்ற மாணவர்களும் இந்த துறைகளுக்கு செல்ல வேண்டும். அறிவியலின் பல்வேறு துறைகளில் நமது சிறந்த அறிவியல் அறிஞர்கள் தோன்றி விட்டால் எங்கு எதிர்காலத்தில் மார்க்கத்தைக் கற்றுக் கொடுப்பவர்கள் அஹ்மதிகளாக இருப்பார்களோ அங்கு உலக அறிவை தருபவர்களும் அஹ்மதி முஸ்லிம்களாகவே இருப்பர். உலகம் உங்களின் தேவையை நாடி நிற்கும். அதுபோன்ற நிலையில் வக்ஃபே நவ் நிச்சயமாக உலகப் பணிகளை ஆற்றக் கூடியவர்களாக இருப்பர். ஆனால், அவர்களின் நோக்கம் தமது பணியின் மூலமாக அல்லாஹ்வின் ஏகத்துவத்தை உலகிற்கு நிரூபணம் செய்வதாக அமையும். அவர் மார்க்கத்தை உலகில் பரப்புபவர்களாக இருப்பர். மற்ற துறைகளிலும் வக்ஃபே நவ் பிள்ளைகள் செல்ல இயலும். ஆனால், அடிப்படை நோக்கம் இவ்வாறானதாக இருக்க வேண்டும். அதனை அனைவரும் அறிந்திருக்க வேண்டும். அது என்னவென்றால் நான் வாழ்க்கையை அர்ப்பணித்தவர் ஆவேன். உலகப் பணிகளை விட்டு விட்டு மார்க்கப் பணிகளை ஆற்றும்படி என்னிடம் எப்போது கூறப்பட்டாலும் நான் எந்தக் காரண காரியங்களையும் கற்பிக்காமல் சென்று விடுவேன் என்ற எண்ணம் இருக்க வேண்டும். இன்னொரு மிக முக்கியமான விஷயம் உள்ளது. அதனையும் வக்ஃபே நவ் பிள்ளைகள் நினைவில் கொள்ள வேண்டும். அவர்களுக்கு உலகப் பணிகளைச் செய்வதற்கு அனுமதி தரப்படுகின்றது. ஆனால், இந்த உலகப் பணிகள் அவர்களை அல்லாஹ்வை வணங்குவது மார்க்க அறிவு மற்றும் மார்க்கத் தொண்டிலிருந்து இழப்பிற்குரியவர்களாக ஆக்கி விடக் கூடாது. மாறாக, அதன் உயர் தரங்களை அடைவதற்கான முயற்சிகளே அவர்களின் முன்னுரிமையாக இருக்க வேண்டும். திருக்குர்ஆனின் தஃப்ஸீர் மற்றும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் புத்தகங்களை படிப்பது ஒவ்வொரு வக்ஃபே நவ் பிள்ளைக்கும் அவசியமானதாகும். வக்ஃபே நவ் துறை 21 வயது வரையிலான பாடத்திட்டத்தை உருவாக்கியுள்ளது. அதன் பிறகு அவர்கள் சுயம் தமது மார்க்கப் புத்தகங்களைப் படிப்பதை தங்களது வழக்கமாக ஆக்கிக் கொள்ள வேண்டும். பெற்றோர்களுக்கும் ஒன்றை நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன். அவர்கள் தமது சொல்லையும்

## வக்ஃபே நவ் திட்டத்தின் கீழ் தமது வாழ்வை அர்ப்பணித்தவர்கள் அதிகமாக ஜாமிஆ அஹ்மதிய்யாவில் சேர வேண்டும்

*ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:*

*“வக்ஃபே நவ் திட்டத்தின் கீழ் தமது வாழ்வை அர்ப்பணித்தவர்கள் அதிகமான எண்ணிக்கையில் ஜாமிஆ அஹ்மதிய்யாவில் சேர்பவர்களாக இருக்க வேண்டும். நமக்கு முன்னால் முழு உலகத்தின் களம் இருக்கின்றது. ஆசியா, ஐரோப்பா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, அல்ஜஸாயிர் ஆகிய ஒவ்வோர் இடத்தையும் நாம் சென்றடைய வேண்டும். ஒவ்வோர் இடத்திலும், ஒவ்வொரு கண்டத்திலும், ஒவ்வொரு நாட்டிலும், ஒவ்வொரு நகரத்திலும் மட்டுமல்லாமல் ஒவ்வொரு சிற்றூரிலும், ஒவ்வொரு கிராமத்திலும், உலகிலுள்ள ஒவ்வொரு நபர் வரையிலும் இஸ்லாத்தின் அழகிய போதனையை நாம் எட்ட வைக்க வேண்டும். சில முபல்லிக்குகளால் இந்தப் பணியைச் செய்து முடிக்க முடியாது. உலகில் மார்க்கத்தைப் பரப்புவதற்காக மார்க்க அறிவு தேவைப்படுகின்றது. எல்லாவற்றையும் விட அதிகமாக மார்க்க அறிவை கற்றுக் கொடுப்பதையே குறிக்கோளாகக் கொண்டிருக்கின்ற அத்தகைய துறையிடமிருந்தே இந்த அறிவு கிடைக்க முடியும். இந்தத் துறை அஹ்மதிய்யா ஜமாஅத்தில் ஜாமிஆ அஹ்மதிய்யா என்ற பெயரில் அறியப்படுகின்றது. எனவே, வக்ஃபே நவ் திட்டத்தின் கீழ் தமது வாழ்வை அர்ப்பணித்தவர்கள் அதிகமாக ஜாமிஆ அஹ்மதிய்யாவில் சேர வேண்டும்.”*

*(ஜுமுஆ குத்பா 18 ஜனவரி 2013)*

*தகவல் : இன்சார்ஜ் வக்ஃபே நவ் துறை, இந்தியா*

செயலையும் அதற்கேற்ப ஆக்கிக் கொள்ளாத வரை தமது பிள்ளைகளுக்கு எவ்வளவு தான் தர்பிய்யத் வழங்கினாலும் அதன் தாக்கம் பிள்ளைகள் மீது ஏற்படாது. தமது தொழுகைகளின் நிலைகளை பெற்றோர்கள் முன்மாதிரியாக ஆக்க வேண்டும். திருக்குர்ஆனை ஓதுவதிலும் கற்பிப்பதிலும் தமது முன்னுதாரணத்தை வெளிப்படுத்த வேண்டும். உயர் நல்லொழுக்கத்தில் முன்னுதாராணமாக திகழ வேண்டும். மார்க்க அறிவை கற்பதில் தாமும் கவனம் செலுத்த வேண்டும். பொய்யின் மீதான வெறுப்புணர்வில் உயர் தரமான முன்மாதிரியை வெளிப்படுத்த வேண்டும்.

சில பொறுப்பாளர்கள் மூலம் சில துன்பங்கள் தமக்கு ஏற்பட்டிருந்தாலும் வீட்டில் ஜமாஅத் அமைப்பிற்கு எதிராகவும் பொறுப்பாளர்களுக்கு எதிராகவும் பேசுவதிலிருந்து விலகியிருக்க வேண்டும். M.T.A –வில் குறைந்தபட்சம் எனது குத்பாவையாவது தொடர்ந்து பெற்றோர்கள் கேட்க வேண்டும். இவ்விஷயங்கள் வெறும் வக்ஃபே நவ் பிள்ளைகளின் பெற்றோர்களுக்கு மட்டும் உரியதல்ல. மாறாக, எந்த அஹ்மதி தனது எதிர்கால சந்ததிகள் ஜமாஅத் அமைப்புடன் தொடர்பு கொண்டவர்களாக இருக்க வேண்டும் என விரும்புகின்றாரோ அப்படிப்பட்ட ஒவ்வோர் அஹ்மதியும் தனது குடும்பத்தை அஹ்மதி குடும்பமாக மாற்ற வேண்டும். உலகவாதிகளின் குடும்பமாக உங்கள் வீட்டை ஆக்கிக் கொள்ளக் கூடாது. இல்லையென்றால் எதிர்கால சந்ததிகள் உலகில் வீழ்ந்து அஹ்மதிய்யத்தில் இருந்து மட்டுமல்ல. இறைவனிடமிருந்தும் விலகிச் சென்று விடுவர். மேலும் அதன் மூலம் தனது இம்மை மறுமை இரண்டையும் நாசமாக்கிக் கொள்வர். எல்லா வக்ஃபே நவ் பிள்ளைகளும் இறை நெருக்கத்தைப் பெறக் கூடியவர்களாகவும் இறையச்சத்தின் படி வழிநடப்பவர்களாகவும் திகழும்படி அல்லாஹ் செய்வானாக! தமது அன்பிற்குரியவர்களின் செயல்களும் அவர்களை எல்லா வகையான அவப்பெயரிலிருந்து காப்பாற்றக் கூடியதாக அமையட்டுமாக! இன்னும் சொல்வதென்றால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீண்டும் மீண்டும் நமக்கு அறிவுரை கூறியதற்கேற்ப ஒவ்வோர் அஹ்மதியும் உண்மையான அஹ்மதியாக ஆகி விட வேண்டும். ஏனென்றால் அப்போதுதான் நம்மால் உலகில் உண்மை இஸ்லாமாகிய அஹ்மதிய்யத்தின் கொடியை விரைவாக பட்டொளி வீசி பறப்பதை காண முடியும்.

## மறைவுச் செய்தி

மேலப்பாளையம் ஜமாஅத்தைச் சார்ந்த ஜனாப் A. அப்துல் முஃமீன் சாஹிப் 9.11.2016 புதன் அன்று அதிகாலையில் தமது 63 –வது வயதில் வஃபாத்தாகி விட்டார்கள். இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்.

அன்னார் 1990 ஆம் ஆண்டு இந்து மதத்திலிருந்து அஹ்மதிய்யா ஜமாஅத்தில் பைஅத் செய்து இணைந்தார்கள். அன்னாருக்குப் பிறகு அன்னாரின் மகனும், மகளும், பிறகு அன்னாரின் மனைவியும் பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைந்தனர். தனது ஒரே மகன் முபல்லிக் ஆகி ஜமாஅத்திற்கு தொண்டாற்ற வேண்டும் என்ற தனது விருப்பத்தின் பெயரில் தமது மகனை காதியான் அனுப்பினார்கள். அன்னார் வஸிய்யத்தில் இணைந்துள்ளார். அன்னார் மரணத்தின்போது ஹிஸ்ஸா ஆமது, ஜாயிதாத் மற்றும் தஹ்ரீகே ஜதீது, வக்ஃபே ஜதீது, அன்ஸாருல்லாஹ் சந்தா போன்ற அனைத்து சந்தாக்களையும் முழுமையாக செலுத்தி விட்டார்கள். தொழுகையையும், சந்தா கொடுப்பதையும் மிகச் சிறந்த முறையில் பேணி வந்தார்கள்.

அன்னார் பைஅத்திற்குப் பிறகு தமது 26 ஆண்டு கால வாழ்க்கையில் சுமார் 9 ஆண்டுகள் வி.கே.புரம் ஜமாஅத்தின் பொருளாளராகவும், பின்னர் அல்லாஹ்வின் அருளால் 2009 ஆம் ஆண்டிலிருந்து மரணத் தருவாய் வரை மேலப்பாளையம் 'மஸ்ஜித் நாஸிர்' பள்ளிவாயிலின் காதிம் மஸ்ஜித் ஆகவும் மிகச் சிறந்த முறையில் ஜமாஅத்திற்கு தொண்டாற்றியுள்ளார்கள். அல்ஹம்துலில்லாஹ்.

அன்னார் தமது நினைவாக ஒரு மனைவியையும், ஒரு மகன் மற்றும் ஒரு மகளையும் விட்டுச் சென்றுள்ளார்கள். அன்னாரது ஒரே மகன் மவ்லவி அப்துர் ரஹ்மான் சாஹிப் தற்போது தூத்துக்குடி ஜமாஅத்தில் முபல்லிக் ஆக தொண்டாற்றி வருகின்றார்கள்.

அல்லாஹ் மர்ஹூமிற்கு மறுமையில் மிக மேலான அந்தஸ்தை வழங்குவானாக! மேலும், தனது அளவற்ற அருளுக்கு அன்னாரை வாரிசாக்குவானாக!

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நமக்கு அறிவுரை செய்தவாறு ஓரிடத்தில் கூறுகின்றார்கள்: மனிதன் ஒன்றிரண்டு பணிகளைச் செய்து முடித்து நான் இறைவனை திருப்தி அடையச் செய்து விட்டேன் என எண்ணுகின்றான். ஆனால் அது தவறாகும். கட்டுப்படுதல் மிகக் கடினமான காரியமாகும். சஹாபா பெருமக்களின் கட்டுப்படுதலே உண்மையான கட்டுப்படுதல் ஆகும். அவர்களின் முன்னுதாரணம் நம்முன் உள்ளது.

கட்டுப்படுதல் என்பது எளிய காரியமா என்ன? எவர் முழுமையாகக் கட்டுப் –படுவதில்லையோ அவர் இந்த அமைப்பிற்கு அவப்பெயரைச் சேர்க்கின்றார். கட்டளை ஒன்று மட்டுமல்ல. மாறாக, கட்டளைகள் ஏராளம் உள்ளன. எவ்வாறு சொர்க்கத்திற்கு பல வாசல்கள் உள்ளனவோ ஒருவர் ஒரு வாசல் வழியாக மற்றொருவர் இன்னொரு வாசல் வழியாக நுழைகின்றாரோ அதுபோன்று நரகிற்கும் பல வாசல்கள் உள்ளன. ஒரு பக்கம் நரகின் ஒரு வாசலை அடைத்து வைத்துக் கொண்டு மற்றொரு பக்கம் நரகின் இன்னொரு வாசலை நீங்கள் திறந்து வைத்து விடாதீர்கள். (மல்ஃபூஸாத் தொகுதி 4 பக்கம் 73-74; 1985 -ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

அடுத்து அன்னார் கூறுகின்றார்கள்: மனிதன் பைஅத் இந்த அமைப்பு உண்மையானது என்றும் இதனை ஏற்றுக் கொள்வதால் மட்டும் அவருக்கு பரகத் ஏற்பட்டு விடும் என்றும் எண்ணம் கொள்தல் கூடாது. இதன் மூலம் மட்டுமே இறைவன் மகிழ்ச்சி அடைந்து விட மாட்டான். நற்செயல்கள் இல்லாத வரை பயனில்லை. இந்த அமைப்பில் நுழைந்து விட்ட பிறகு நல்லவராக ஆகுவதற்கும் இறையச்சமுடையவராக திகழ்வதற்கும் முயற்சி செய்யுங்கள். எல்லா தீமைகளிலிருந்து விலகி நில்லுங்கள். நாவினை மென்மையாக வைத்து இஸ்திக்ஃபார் செய்வதை வாடிக்கையாக்கிக் கொள்ளுங்கள். தொழுகையில் துஆக்கள் செய்யுங்கள். (மல்ஃபூஸாத் தொகுதி 4 பக்கம் 274; 1985 -ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

அல்லாஹ் நம் அனைவருக்கும் இந்த அறிவுரைகளின்படி செயல்படும் பாக்கியத்தை வழங்குவானாக! நாமும் நமது சந்ததிகளும நன்மை மற்றும் இறையச்சத்தில் நிலைநிற்பவர்களாக திகழ்வோவாக! மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வருகையின் நோக்கத்தை முழுமை செய்பவர்களாக திகழ்வோமாக! ஆமீன்.

★ ★ ★ ★ ★

(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)

*2* இந்த விஷயமும் சிந்திக்கத்தக்கதாகும். எந்த நபர் இருபது வருடங்களாக தமது எழுத்துக்களிலும் சொற்பொழிவிலும் எனக்கு ஆதரவான கருத்துக்களைக் கூறி வந்தாரோ, மேலும் எதிரிகளுடன் இவ்விஷயத்தில் சண்டை போட்டுக் கொண்டிருந்தாரோ அவருக்கு இருபது வருடங்களுக்குப் பிறகு எந்த புதிய விஷயம் தெரிய வந்திருக்கின்றது ? எந்த குறைகள் என்னிடம் இருப்பதாக அவர் எழுதியுள்ளாரோ அவற்றிற்கான பதிலை இவரே ஏற்கனவே கூறியுள்ளார். அந்த குறைகளையே மீண்டும் இப்போது கூறுகின்றார்.

*3* அப்துல் ஹகீம் கண்ட கனவில் முஹம்மது ஹஸன் பேக்கின் மரணம் பற்றிய செய்தி தெரிவிக்கப்பட்டிருந்தது. அதற்கேற்ப ஹஸன் பேக் மரணித்தும் விட்டார். அதனை அவர் ஷய்த்தானிய கனவு என்று கூறுகின்றார். இதுவும் கூட அவர் தமது சுய நினைவை இழந்து விட்டார் என்பதற்கான அடையாளமாகும். எதிர்ப்பில் அவர் காட்டும் வேகம் அவரது அறிவை அழித்து விட்டது. எந்தக் கனவை சம்பவங்கள் உண்மையானதாக ஆக்கி விட்டதோ அது இறைவன் புறமிருந்து வந்துள்ள கனவு என்பதற்கான முத்திரையை பதித்து விட்ட பிறகு அது எவ்வாறு பொய்யானதாக இருக்க முடியும் ? இதற்கு எதிராக இப்போது அவருக்கு வருபவைதான் பொய்யானவையும் மனயிச்சைகளின் காரணமாக வருகின்ற கனவுகளும் ஆகும். அவற்றின் மீது உண்மையின் எந்தவொரு முத்திரையும் இல்லை. ஆனால், அவர் கண்ட இந்தக் கனவில் அணுவளவும் கூட ஷய்த்தானின் தலையீடு இருக்கவில்லை. ஏனென்றால், இது ஒரு திகில் நிறைந்த சம்பவம் மூலமாக நிறைவேறி விட்டது. முஹ்யி (உயிர்ப்பிப்பவன்) மற்றும் முமீத் (மரணிக்கச் செய்பவன்) ஆகியவை இறைவனின் பெயர்களாகும். அவை ஷய்த்தானின் பெயர்கள் அல்ல. எனினும், இந்த உண்மையான கனவின் மூலமாக அப்துல் ஹகீமிற்கு இருக்கும் எந்த சிறப்பும் நிரூபிக்கப்படவில்லை. ஏனென்றால், ஹஸ்ரத் யூசுஃப் (அலை) அவர்களின் காலத்தில் காஃபிர்களுக்குக் கூட உண்மையான கனவுகள் வந்திருந்தன. பெரும் பெரும் காஃபிர்களுக்குக் கூட சில நேரங்களில் உண்மையான கனவுகள் வருகின்றது. இறைவனால் ஏற்றுக் கொள்ளப்பட்டவர்கள் ஒன்றிரண்டு கனவுகளால் மட்டுமல்லாமல் அவர்களுக்கு மறைவான செய்திகள் அதிகமாக வழங்கப்படுவதன் மூலமாகவும் ஒரு சிறப்பான அருளின் மூலமாகவும் அடையாளங்கண்டு கொள்ளப்படுகின்றனர்.

*(ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயின் தொகுதி 22 பக்கம் 190-192)*

EDITOR
MUZZAMMIL AHMAD
SUB EDITOR
RAFEEQ AHMAD
Mobile : + 91 98885-67232
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

Title Code: PUNTAM00001
The Weekly **BADAR** Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Vol. 1 | Thursday 1 DECEMBER 2016 | Issue No. 39

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com
ANNUAL SUBSCRIPTION : Rs.300/-

بسم اللہ الرحمن الرحیم نحمدہ ونصلی علی رسولہ الکریم وعلی عبدہ المسیح الموعود

மக்களே! இங்கு வாருங்கள். இங்குதான் நீங்கள் இறைவனின் ஒளியைப் பெறுவீர்கள். நீங்கள் திருப்தியடையும் வழியை நாம் கூறி விட்டோம். (துர்ரே ஸமீன்)

لا إله إلا الله محمد رسول الله

வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வை தவிர வேறு யாரும் இல்லை. முஹம்மது (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் ஆவார்கள்.

எல்லா பக்கமும் குரல் கொடுத்து அழைப்பதே இன்று நமது பணியாகும். நல்லியல்பு கொண்டவர்கள் இறுதியில் நம் பக்கம் வருவர். (துர்ரே ஸமீன்)

**MONDAY 26TH - TUESDAY 27TH - WEDNESDAY 28TH DECEMBER 2016**

# 122nd JALSA SALANA
## ANNUAL CONVENTION QADIAN

جلسہ سالانہ

(ஆண்டு மாநாடு தொடங்கியதிலிருந்து 125 வது வருடம்)

ஆண்டு மாநாடு இறைவனின் மகத்தான ஆற்றல்களின் ஓர் அடையாளமாகும்.

**இந்திய அஹ்மதிய்யா ஜமாஅத்தின் 122 -வது ஆண்டு மாநாடு**

**உண்மையை தெரிந்து கொள்வதற்கும் இஸ்லாத்தின் போதனை மற்றும் அஹ்மதிய்யத்தின் உண்மையை தெரிந்து கொள்வதற்கான சிறந்த சந்தர்ப்பம்**

**At: Mohallah Ahmadiyya Qadian.**

**திங்கள் 26 செவ்வாய் 27 புதன் 28 டிசம்பர் 2016**

**நடைபெறும் இடம்: முஹல்லா அஹ்மதிய்யா காதியான்.**

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: இந்த மாநாட்டை சாதாரண மனிதர்களின் மாநாடு போன்று கருத வேண்டாம் . இதற்கு முழுக்க முழுக்க இறைவனின் உதவி இருக்கின்றது. இஸ்லாத்தின் கலிமாவை உயர்த்துவதற்கான அடித்தளம் இதில் இடப்பட்டுள்ளது. (மஜ்முஆ இஷ்திஹாராத் தொகுதி 1, பக்கம் 241, 7 டிசம்பர் 1892)

## நிகழ்ச்சிகள்

*டிசம்பர் 28 ஆம் தேதி ஞாயிறு அன்று நண்பகலுக்குப் பிறகு அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் இறை ஞானம் நிறைந்த ஈமானுக்கு வலுவூட்டக் கூடிய மாநாட்டின் நிறைவுரை இருக்கும். இதை தவிர கீழ்க்காணும் தலைப்புகளில் கண்ணியத்திற்குரிய ஆலிம்கள் சொற்பொழிவு நிகழ்த்துவர்*



1. *இறைவனின் இருப்பு (இறைவனின் ஓரிறைமையும், உலகிலுள்ள மதங்களும்)*
2. *ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை (நீதியை நிலைநாட்டுவதன் ஒளியில்)*
3. *ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வாழ்க்கை (ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்காக வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் காணப்பட்ட அர்ப்பணிக்கும் உணர்வு*
4. *ஹஸ்ரத்வாக்களிக்கப்பட்டமஸீஹ்(அலை)அவர்களின்உண்மைத்துவம் (இறை உதவிகளின் ஒளியில்)*
5. *சஹாபா ரிழ்வானுல்லாஹி அலைஹிமின் வாழ்க்கை (ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் ஷேக் யாகூப் அலி இர்ஃபானி சாஹிப் (ரலி) அவர்களின் வாழ்க்கையிலிருந்து)*
6. *அல்லாஹ்வின் பக்கம் அழைத்தல் மற்றும் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் பொறுப்புகள்*
7. *முஸ்லிம்களின் ஒற்றுமையும் உலக அமைதி நிலைநாட்டப் -படுவதும் நபித்துவ வழியில் தோன்றியுள்ள கிலாஃபத்துடன் தொடர்புடையதாகும்.*
8. *மார்க்க தோற்றுனர்களுக்கு கண்ணியமளிப்பதே உலக அமைதிக்கான உத்திரவாதமாகும் (சமாதானத் தூது என்ற நூலின் ஒளியில்) - இச்சொற்பொழிவு பஞ்சாபி மொழியில் நிகழ்த்தப்படும்.*
9. *வஸிய்யத் அமைப்பின் முக்கியத்துவமும் அதன் அருள்களும் (ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் அய்யதஹுல்லாஹுத்தஆலா அவர்கள் எடுத்துக் கூறியுள்ள ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய சம்பவங்களின் ஒளியில்)*
10. *கிலாஃபத் அமைப்பிற்கு கட்டுப்படுவதும் அதன் அருள்களும்*
11. *உண்மை இஸ்லாமாகிய அஹ்மதிய்யத் (அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மீது இழைக்கப்படும் அநீதிகள் மற்றும் ஜமாஅத் சகோதரர்கள் கடைபிடிக்கும் பொறுமையும் அவர்கள் உறுதியாக நிலைத்திருப்பதும்)*
12. *அஹ்மதிய்யா ஜமாஅத்தும் திருக்குர்ஆன் தொண்டும்*

**ஆண்டு மாநாட்டின் ஓர் அமர்வு மார்க்க தோற்றுனர்களின் மாநாடாக இருக்கும். மாநாட்டில் நிகழ்த்தப்படும் சொற்பொழிவுகள் அரபி, ஆங்கிலம், வங்காளம், மலையாளம், தமிழ், கன்னடம், தெலுங்கு ஆகிய மொழிகளில் உடனுக்குடன் மொழியாக்கம் செய்யப்படும்.**

முக்கிய குறிப்பு :

1) இந்தியாவிற்கு வெளியிலிருந்தும் பார்வையாளர்கள் வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

2) சொற்பொழிவுகள் நிகழ்த்தப்படும் போது எவருக்கும் கேள்வி கேட்பதற்கான அனுமதி இல்லை.

3) இது முழுக்க முழுக்க ஆன்மீக மார்க்க மாநாடாகும். இந்த மாநாட்டிற்கு அரசியலுடன் எந்த தொடர்பும் இல்லை.

**Contact Address : NAZIR ISLAH-O-IRSHAD, QADIAN, GURDASPUR DISTRICT, PUNJAB, PIN 143516**
**Ph. (O) 01872-500980, Fax. 500977, Mob. 9417730907,9417485781, 9878047444, Toll Free 180030102131**

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad